**கடனாளி ஆக்கிய இரசாயனம்.. கவலையைப் போக்கிய ஜீவாமிர்தம்..! தென்னையோடு ஜிலுஜிலுக்கும் ஜீரோ பட்ஜெட் வாழை!**



ஊர் எல்லாம் தென்னையில் ஈரியோபைட் சிலந்தி தாக்கியிருக்கு. ஆனால் என்னுடைய தோட்டத்திற்கு தென்னையில் அந்தத் தாக்குதலே இல்லை! என்று ‘அரசூர்’ சோமசுந்தரம் கூறினார்.“ரசாயன உரம் போட்டு, தென்னையைப் பராமரித்து வந்தபொழுது ஈரியோபைட் சிலந்தி தாக்குதல் அதிகமாக இருந்தது. காயெல்லாம் சொறி பிடித்து, அம்மைப் போட்டது போலாகிவிட்டது. பணத்தை வீணடித்து அனைத்து மருந்தையும் அடித்துப் பார்த்தேன். ஆனால் சிலந்தி, எதற்கும் கட்டுப்படவில்லை. இரண்டு வருடமாக எந்த மருந்தும் போட வில்லை. ஜீவாமிர்தம் மட்டும்தாக் கொடுக்கிறேன். ஈரியோபைட் இருந்த இடமே இல்லாமல் போயிவிட்டது.

இப்பொழுது காயெல்லாம் நல்ல பொலிவுடன் காணப்படுகிறது” என்று சோமசுந்தரம் கூறினார். பொள்ளாச்சிப் பகுதியில் ஒரு மரத்திற்கு நூறில் இருந்து நூற்றிப்பத்து காய் வரைக்கும் தான் சராசரியாக கிடைக்கிறது. ஆனால் நான் 165 காய்க்கு மேல் எடுக்கின்றேன். ஊடுபயிர் செய்வதால் தென்னையில் காய்ப்புத் திறன் கூடுமே தவிர குறையாது என்று நண்பர் உடையகுளம் கணேஷ் கூறினார். அதனால் வாழை, முருங்கை இது இரண்டையும் ஊடுபயிராகப் போட முடிவு செய்திருக்கிறேன்.20, 30 சாம்பல் வாழையை (கற்பூர வாழை), தென்னைக்கு நடுவில் நட்டு வைத்தேன். இதற்கென்று தனியா தண்ணீரோ, உரமோ கொடுக்கவில்லை. தென்னைக்குப் பாயுற ஜீவாமிர்தம் தான் இவற்றிற்கும் போகிறது. அதிலயே வாழை நன்றாக தழைந்து வந்துவிடுகிறது. இதை பார்க்கும் பொழுது ஊடுபயிர் பிரதானப் பயிருக்குத் துணைபோகுமே தவிர பிரதானப் பயிருடன் விளைச்சலைக் கெடுக்காது என்பது நன்றாகப் புரிகிறது.ஒரு ஏக்கர் முழுவதும் ஊடுபயிராக போட வேண்டுமென்றால் 600 வாழைக் கன்று தேவைப்படும் என்று கூறுகிறார்கள். ஒரு குலை (தார்) 250 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரைக்கும் விற்கின்றது. அதனால் இந்த வருடமே ஊடுபயிரை ஆரம்பிக்கப் போகிறேன் என்று உற்சாகத்தோடு கூறினார் சோமசுந்தரம்.

“ரசாயன உரங்களைப் போட்டப்ப மூன்று நாளைக்கு ஒரு தண்ணீர் கொடுத்தேன். 10 வருடத்திற்கு முன் கடும் வறட்சி வந்தபொழுது ஐந்தாறு போர் போட்டுத்தான் சமாளித்தேன். அதற்காக மட்டும் 3 லட்சம் ரூபாய்க்கு மேல் கடனாகிப் போனது. ஆனால் ஜீவாமிர்தத்துக்கு மாறின பிறகு 10 நாட்களுக்கு ஒரு முறைதான் பாசனம் செய்கிறேன். ஆனால் இன்றும் ஈரம் அப்படியே இருக்கிறது. 15 நாட்களுக்கு ஒரு முறை விட்டாலே, போதும் என்று நினைத்தேன். “இந்த ஜீரோ பட்ஜெட்டை முன்கூட்டியே எங்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தால் 3 லட்சம் செலவாகமல் இருந்திருக்குமே” என்று பசுமை விகடனுக்கும், ஜீரோ பட்ஜெட் இயற்கை வேளாண்மைக்கும் நன்றியைத் தெரிவித்தார் சோமசுந்தரம்.

**தொடர்புக்கு:**
திரு. சோமசுந்தரம்,
அரசூர்.